
**திராவிடத்தால் வாழ்கிறோம்**

**991**

எழுத்து:
கோவி.லெனின்
ஓவியம்:
கி.சொக்கலிங்கம்




-வாழ்வோம்

# ‘மைனாரிட்டி’ தி.மு.க.

**மரு.எஸ்.ஏ.எஸ்.ஹபிசுல்லா**

**33**

**தி.மு.க.வுக்கும் சிறுபான்மையினருக்குமான உணர்வுபூர்வமான உறவையும் உரிமைச் செயல்பாடுகளையும் விவரிக்கும் தொடர்**

# உசேன் : எதற்கும் வளையாத முதுகெலும்பு!

*2001-ஆம் ஆண்டு, அ.தி.மு.க ஆட்சிக்கு வந்து 45 நாட்கள் ஆகியிருந்தன. ஜூன் 30-ஆம் தேதி நள்ளிரவில், ஆலிவர் சாலை இல்லத்துக்குள் திபுதிபுவென பூட்ஸ் கால்களுடன் பூட்டை உடைத்துக்கொண்டு புகுந்த காவல்துறை, தானைத் தலைவர் கலைஞரை குண்டுக்கட்டாகத் தூக்கிச் சென்றது. தடுக்க வந்த ஒன்றிய அமைச்சர் முரசொலி மாறன் தள்ளிவிடப்பட்டார். வாசலில், தரையில் படுத்தபடி தர்ணா செய்ய முயன்ற பரிதி இளம்வழுதியையும் உதைத்துத் தள்ளிவிட்டுச் சென்றனர். காரில் ஏற்றிக்கொண்டு, கலைஞரை அழைத்துச்சென்ற இடம், அரசினர் தோட்ட வளாகம்.*

*ராணுவ அணிவகுப்பு போல எல்லா வாயில்களையும் அடைத்து நின்றது காவல் துறை. எவருக்கும் உள்ளே அனுமதி இல்லை. செய்தி சேகரிக்க வந்த 30-க்கும் மேற்பட்ட பத்திரிகையாளர்களையும் வேனில் ஏற்றிக் கைதுசெய்த கொடூரங்கள் அரங்கேறிக் கொண்டிருந்தன. என்ன வழக்கு? எதற்கு கைது? என்று அதுவரையிலும் யாருக்கும் எந்தத் தகவலும் சொல்லப்படவில்லை. நிலைமை கைமீறிப் போய்விட்ட அந்தச் சூழலில், கலைஞரை சந்திக்க உள்ளே சென்றனர் இருவர். ஒருவர், தி.மு.கழகத்தின் இன்றைய துணைப் பொதுச்செயலாளரும் தி.மு.க.வின் நாடாளுமன்ற குழுத் தலைவருமான கனிமொழி. மற்றொருவர் ஆயிரம்விளக்கு உசேன்.*

*கலைஞருக்கும், கழகத்துக்கும் இடர் என்றால், அந்த இடத்தில் உறுதியோடு நின்ற கலகக்காரர் உசேன். 1994-ஆம் ஆண்டு தி.மு.க.விலிருந்து வெளியேறிய சிலர், ‘அறிவாலயத்தைக் கைப்பற்றுவேன்’ என்று சொன்னபோது, அப்போதைய சென்னை மாவட்டச் செயலாளர் சைதை கிட்டுவுடன் இணைந்து தினமும் இரவு அறிவாலயத்திலேயே தங்கி, பாதுகாப்புப் பணிகளை மேற்கொண்டார். அதனால்தான், “தம்பி உசேன் எனக்கு இந்திரஜித்தைப் போன்றவர்” என்று குறிப்பிடுவார் கலைஞர்.*

## மிசாவில் இரண்டு முறை கைது!

*1976 -ஆம் ஆண்டு ஜனவரி 31 அன்று நெருக்கடி நிலை காலத்தில் தமிழ்நாட்டில் தி.மு.க அரசு கவிழ்க்கப்பட்டது. அதன்பிறகு, கழகத்தின் முன்னணி நிர்வாகிகள் பலரும் கைது செய்யப்பட்டனர். தனிமைச் சிறையில், தொழுநோயாளிகள் அறையில் அடைக்கப் பட்டனர். சிறுநீர் கழிக்க, மலம் கழிக்க வசதியில்லை. நல்ல உணவு கிடையாது. சமைத்த பின்னர், சோற்றில் உப்பை அள்ளிக் கொட்டுவது, மண்ணை அள்ளிக் கொட்டுவது, வேப்பெண்ணெய் ஊற்றுவது என உலகில் எங்கும் நடந்திராத கொடுமைகளை எல்லாம் மிசா கைதிகள் சந்தித்தனர். பல இரவுகளில் குண்டாந்தடித் தாக்குதல்களை எதிர்கொள்ள வேண்டியிருந்தது. நிற்கவும் முடியாமல், நடக்கவும் முடியாமல் ரத்தம் சொட்டச்சொட்ட மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டவர்கள் ஏராளம்.*

*இப்படிப்பட்ட கொடுமைகளை எதிர்கொண்ட எவர் ஒருவரும், நிலைமை சரியாகும் வரை அரசியலை விட்டு அமைதியாக இருக்கலாம் என்றே எண்ணுவர். ஆனால், தி.மு.கழகம் சராசரி அரசியல் கட்சி அல்ல, தி.மு.க. தொண்டர்கள் சராசரி அரசியல்வாதிகளும் அல்லவே! அதை உணர்த்தியவர் ஆயிரம்விளக்கு உசேன். முதுகில் லத்தி கோடுகளைக் கண்டு பதறிய கலைஞர், உசேனின் முதுகில் பாசத்துடன் தடவிக்கொடுத்தார். “தலைவர் தடவிக் கொடுத்த அன்றிலிருந்து இன்றுவரை என் முதுகெலும்பு எதற்கும் அஞ்சாது சுயமரியாதை யோடு நிமிர்ந்து நிற்கிறது” என்பார் உசேன். அவரது இறுதிக்காலம் வரை இந்த உணர்வில் இருந்து அவர் மாறவே இல்லை.*

## கொள்கை உறுதிக்காரர்

*சிறையிலும், போராட்டக் களங்களிலும்*



*மிசாவில் கைது செய்யப்பட்டு, சிறைக்கொடுமை களை அனுபவித்துவிட்டு வெளியே வந்த பின்பும், அவர் அமைதியாக இருக்கவில்லை. அதனால் மிசாவிலேயே இரண்டாவது முறை கைது செய்யப்பட்டார். “இந்தியாவிலேயே மிசாவில் இரண்டு முறை கைது செய்யப்பட்ட ஒரே நபராக உசேன் அவர்கள்தான் இருப்பார்” என்கிறார், கழகத்தின் அமைப்புச்செயலாளர் ஆர்.எஸ்.பாரதி அவர்கள்.*

*முதல் முறை மிசாவில் இருந்து வெளியே வந்தவுடன், கலைஞருக்கு எப்படியாவது பிறந்தநாள் விழா நடத்த வேண்டுமென்று விரும்பினார் உசேன். ஆனால், காவல்துறை கெடுபிடிகள் காரணமாக நிகழ்ச்சி நடத்த மண்டபமே கிடைக்கவில்லை. மண்டபம் கிடைத்தாலும் கொடுப்பதற்கு கையில் பணமில்லை. அதனால், காவல்துறைக்குத் தகவல் சொல்லாமல் மண்டபத்தை முன்பதிவு செய்ய முடிவெடுத்தார் உசேன். அதற்காகத் தனது கைக்கடிகாரத்தை விற்று, காசு ஈட்டினார். அப்போது, அவர் ஆயிரம்விளக்குப் பகுதியின் கழகச் செயலாளர்.*

*நெருக்கடி நிலையைத் திணித்த இந்திரா காந்தியைக் கண்டித்து, 1977-இல் அவர் சென்னை வந்தபோது கழகத்தின் சார்பில் கருப்புக்கொடி காட்டி எதிர்ப்பு தெரிவிக்கப்பட்டது. அந்தப் போராட்டத்தில் பங்கேற்று, காவல்துறையின் தடியடியில் கடுமையாகப் பாதிக்கப்பட்டார். அவரது அடிபட்டு, மிதிபட்டு கழகம் வளர்த்தவர், கலைஞருக்கும் கழகத்துக்கும், கழக அலுவலகங்களுக்கும் அரணாக நின்றவர். ஆனால், ஒருநாளும் கழகத்தால் இலாபம் அடைய வேண்டுமென்று எண்ண மாட்டார். தன்னலங் கருதாத கொள்கையாளர்.*

> **“சென்னையில் ஒட்டுமொத்த இஸ்லாமிய சமூகத்தையும் கழகத்தின் பின்னால் ஓரணியில் திரண்டு நிற்கச் செய்தார். அவரது மறைவுக்குப் பிறகும், அந்த நிலை மாறவில்லை.”**

*கழகத் தொண்டர் ஒருவரின் மகளுக்கு ஒருமுறை கல்லூரியில் சீட் வாங்கிக் கொடுத்ததற்காக, உசேனை அவரது வீட்டில் சந்தித்து நன்றி தெரிவிக்க வந்துள்ளனர். வந்தவர்கள் ஒரு பழக்கூடை அளிக்க, உசேன் அவர்களின் துணைவியார் அதைத் திறந்தபோது, பழங்களுக்குப் பதிலாக பணம் இருந்துள்ளது. அதைப்பார்த்து வெகுண்ட உசேன் அவர்கள், “நீ கழகக்காரன் என்பதால், உன் மகளுக்கு கல்லூரியில் இடம் கிடைக்க ஏற்பாடு செய்தேன். பணத்திற்காக அல்ல. பணம் கொடுத்தால், என்னிடம் வேலை நடக்கும் என்ற எண்ணத்துடன், என் வீட்டு வாசற்படியை மிதிக்காதீர்கள்” என வந்தவரைக் கண்டித்து அனுப்பி இருக்கிறார்.*

*எந்தச் சிறையாலும் வீழ்த்திவிட முடியாத, எந்த பூட்ஸ் கால்களுக்கும் - லத்திகளுக்கும் பயந்திராத, எவராலும் விலை பேச முடியாத அந்தக் கொள்கை உறுதிக்காகத்தான், உசேன் கழகத்திற்கும் கலைஞருக்கும் ஆயிரம்விளக்கின் அற்புத விளக்காக இருந்தார். அந்த திடமான கொள்கை உறுதிக்காகத்தான் உசேனின் இறுதி ஊர்வலத்தில் நாள் முழுவதும் பங்கேற்றார், கழகத்தின் இன்றைய தலைவர். காத்திரமான கழகப் பணிகளில் தன் வாழ்வை அர்ப்பணித்தவருக்கு, அது உண்மையான இறுதி மரியாதையாக அமைந்தது.*

*ஆயிரம்விளக்கு உசேன், தி.மு.க. பிரதிநிதியா அல்லது சிறுபான்மைச் சமூகப் பிரதிநிதியா என்றால், முதலில் அவர் தி.மு.க பிரதிநிதிதான். ஆனாலும், சென்னையில் ஒட்டுமொத்த இஸ்லாமிய சமூகத்தையும் கழகத்தின் பின்னால் ஓரணியில் திரண்டு நிற்கச் செய்தார். அவரது மறைவுக்குப் பிறகும், அந்த நிலை மாறவில்லை.*

**...நீளும்**

## பெண் மருத்துவர்களின் சாதனை!



பீகாரில் இருந்து தமிழ் நாட்டுக்கு வேலைக்கு வந்த, 28 வயதான புலம்பெயர் தொழிலாளர் ஒருவர், கடந்த மாதம் பூங்கா ரயில் நிலையத்தில் விபத்தில் சிக்கியுள்ளார். விபத்தில் அவரின் இடதுகை தோள்பட்டை வரை துண்டானது. வலது கை மணிக்கட்டுக்கு மேல் முழுமையாகச் சிதைந்துவிட்டது. அருகில் உள்ள ராஜீவ் காந்தி மருத்துவமனையில் அவர் அனுமதிக்கப்பட்டார். இரண்டு கைகள் வெட்டுப்பட்டாலும் பிளாஸ்டிக் அறுவை சிகிச்சை மூலம் இணைத்துவிடக்கூடிய வசதிகள் இப்போது வந்துவிட்டன. ஆனால், இந்த இளைஞருக்கோ, தசை, நரம்பு, எலும்பு வரை முழுமையாக நசுங்கிவிட்டது.

இதனால் என்ன செய்வது என யோசித்த அரசு மருத்துவர்கள், Cross - hand replantation எனப்படும், ஒரு கையிலிருந்து சதையை எடுத்து இன்னொரு கைக்குப் பொருத்தி செய்யக்கூடிய அறுவை சிகிச்சையை மேற்கொள்ள முடிவு செய்தனர். ராஜீவ் காந்தி அரசு மருத்துவமனை மருத்துவர்கள் இரண்டு குழுக்களாய்ப் பிரிந்து 10 மணி நேரம் தொடர் அறுவை சிகிச்சை செய்தனர். அதன்படி, துண்டான இடது கையின் பகுதி, வலது முழங்கையில் வெற்றிகரமாகப் பொருத்தப்பட்டது.

இத்தகைய அறுவை சிகிச்சையானது, இதுவரை உலகத்திலேயே மொத்தம் நான்கு பேருக்குதான் செய்யப்பட்டிருப்பதாக மருத்துவ உலகம் சொல்கிறது. இந்தியாவில் இதற்குமுன்பு ஒரே ஒருவருக்கு மட்டும்தான் இந்த அறுவை சிகிச்சை செய்யப்பட்டுள்ளது. அரசு மருத்துவமனையில் இந்த அறுவை சிகிச்சை செய்யப்பட்டிருப்பது இதுவே முதன்முறை. இது மட்டுமே சாதனையா என்றால், நிச்சயம் இல்லை.

ஒட்டுறுப்பு அறுவை சிகிச்சை பேராசிரியர் பி.ராஜேஸ்வரி, உதவிப் பேராசிரியர்கள் ரஷிதா பேகம், வி.எஸ்.வளர்மதி, ஸ்வேதா, முதுநிலை மருத்துவர்கள் ஷோனு, அன்னபூரணி, மயக்கவியல் நிபுணர் சண்முகப்பிரியா என அனைவரும் பெண்கள். முதுநிலை மருத்துவர் விக்ரம் மட்டுமே அறுவை சிகிச்சைக் குழுவில் இருந்த ஆண். இதுவும் தமிழ்நாட்டின் சாதனைச் சுவடு என்றால் மிகையில்லை!

## ப்ளாஷ்பேக்



### தலைவரை சந்தித்த தருணம்!



அலி ஷேக் மீரான்

2010-ஆம் ஆண்டில், தமிழ்நாடு முதல் அமைச்சராக இருந்த தானைத் தலைவர் கலைஞர் அவர்களை, மும்பை புறநகர் தி.மு.க. செயலாளர் பொ.அப்பாதுரையுடன், அப்போது கழக தலைமைச் செயற்குழு உறுப்பினராக இருந்த நானும் சென்று சந்தித்தேன். எங்களுடன், காங்கிரஸ் கட்சியைச் சேர்ந்த பிரமுகர்கள் அண்ணாமலை, லலிதா அண்ணாமலை ஆகியோரும் வருகை தந்து தலைவரை சந்தித்து மகிழ்ந்தனர்.

**– அலி ஷேக் மீரான், பொறுப்பாளர், மும்பை புறநகர் மாவட்டம்.**

இது போன்ற அரிய புகைப்படங்களைச் சிறுகுறிப்புடன் எங்களுக்கு அனுப்புங்கள். அலைபேசி எண் அவசியம்.
அனுப்ப வேண்டிய முகவரி: அன்பகம், 614, அண்ணா சாலை, தேனாம்பேட்டை, சென்னை - 600 018.
வாட்ஸ்அப் எண் : 90033–24473 மின்னஞ்சல்: youthwing@dmk.in

## கருவூலம்

### 20 ஆயிரம் பேர் சிறையில்...

1962- ஆம் ஆண்டு, விலைவாசி உயர்வைக் கண்டித்து கழகம் நடத்திய போராட்டத்தில், தமிழ்நாடு முழுவதும் மொத்தம் 20,000 பேர்கள் கைது செய்யப்பட்டனர். இவர்கள் மீது கிரிமினல் திருத்தச் சட்டப் பிரிவின்கீழ், வழக்குகள் பதிவுசெய்யப்பட்டு, மதுரை, கோவை, திருச்சி, தஞ்சை, சென்னை, வேலூர் சிறைகளில் காவலில் வைக்கப்பட்டனர்.

RNI 1244/57 - Postal Reg.No.MA/43/2024-2026.Licenced to post under without pre payment of postage vide No.TN/WPP-94/SR/2024-2026 Published by Karthikeyan Shanmugasundaram on behalf of Murasoli Trust from No:180, Kodambakkam High Road, Chennai - 600 034 and Printed by D.Karthikeyan at Dinakaran Press, No.2/2, Melur Main Road, Uthangudi, Madurai - 625 107. Editor: Karthikeyan Shanmugasundaram, Regn.No.7436, Ph:044-2817 9191, 2817 9131 Fax: 2817 9292.